# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.04.2024 தீபம் 22


# பிள்ளைகள் கெட்ட வார்த்தைகள் பேசுவதில்லை கேட்ட வார்த்தைகளையே பேசுகின்றனர்

## கலாசாலையில் தமிழக உளவியலாளரும் பிரபல செயலூக்கப் பேச்சாளருமான முனைவர் சரண்யா ஜெயக்குமார்

### தற்கால மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கைக்கொள்ளக் கூடிய உத்திகள் என்ற பொருளில் சிறப்புரை





இந்தியத் துணைத்தூதரகத்தினதும் இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தினதும் ஆதரவுடன் தமிழகத்தின் பிரபல செயலூக்கப் பேச்சாளர் முனைவர் சரண்யா ஜெயக்குமார் பங்கேற்ற செயலூக்க உரை 11.03.2024 மாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடக்கவுரையை இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தின் இணைப்பாளர் லண்டனைச் சேர்ந்த பொறியியலாளர் இணுவிலூர் நடராசா சச்சிதானந்தம் ஆற்றினார். நிறைவுரையை லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் சிவாப்பிள்ளை ஆற்றினார்

ஆசிரியர் மாணவர்கள் பயன்படக்கூடிய வகையில் அவரது உரை அமைந்திருந்தது. அத்துடன் ஆசிரிய மாணவர்களிடம் வினாக்களை வினாவி அதிலிருந்து தனது கருதததுகளை முன்வைத்தார்

அவரது உரையின் முழுமையான பகுதியை கலாசாலையின் முகநூல் பக்கமான கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்ற பக்கத்தில் காணலாம். https://youtu.be/uSog8guynNk?si=VJL_fA9jU1f_D3ex



**அனைவருக்கும் இனிய குரோதி தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்**



**01.03.2024 — 31.03.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


# தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு உண்டியல் கலாசாலைக்கு வருகை

தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு உண்டியல் கடந்த 19.03.2024 கலாசாலையில் இருந்து கோப்பாய் பிரதேசத்திற்குரிய பயணத்தை ஆரம்பித்தது. இந்நிகழ்வில் கலாசாலை சார்பில் அதிபர் திரு ச.லலீசன் வாழ்த்துரை வழங்கினார் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ் தபால் கிளை முகாமையாளர் திரு வி. சுதாகரன் கோப்பாய் கிளை முகாமை யாளர் திரு அன்ரன் யோகநாயகம் அச்சு வேலி கிளை முகாமையாளர் திரு ஸ்ரீ ஜங்கரன் கோப்பாய் தபால் அலுவலக அதிபர் திரு ந. மோகன்ராஜ்.கலாசாலையின் பிரதி அதிபர்களான திரு க. செந்தில் குமரன், திரு தகோபாலகிருஷ்ணன் விரிவு ரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் தேசிய சேமிப்பு வங்கியின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்






# கலாதீபம்

Kaladeepam

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

சொட்டு நீரும் எங்கள் சொத்து" என்பது பொதுவாக அனைத்து ஊடகங்களிலும் காட்சிப்படுத்தப்படும் வாக்கியம் ஆகும். மார்ச் மாதம் 22 ஆம் திகதி பண்பாட்டு நீர் தினம் கொண்டாடப்படுகின்றது. குறித்த தினத்தை ஒட்டி பல நிகழ்வுகள், உரைகள், பிரகடனங்கள், சில அறிக்கைகள் என பரபரப்பாக பேசப்படும். பின்னர் யாவையும் அடங்கிவிடும். வாய் சொல்லில் வீரர் என்ற யோகனின் வாக்கியமும் எம் பார்வைக்கு வந்து செல்லும். வெறுமனே வாய்ச் சொல்லுடன் நம் கதைகள் கடந்து விடுமா? அல்லது சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கப் போகின்றோமா? என்பதே எம் முன்னிற்கும் வினா ஆகும்.

2024 ஆம் ஆண்டு நீர் தினத்தின் தொனிப் பொருளாக "அமைதிக்காக நீர்" வரையறுக்கப் பட்டுள்ளது. இதனையே வள்ளுவனும்
"நீரின்றி அமையாது உலகெனின்
யார்யார்க்கும் - வானின்று அமையாது உலகு"
மழை இல்லா விடத்து ஒழுக்கம் குறைந்து மனித சமூகம் மாண்பிழக்கும் இதனையே இவ்வாண்டின் நீர் தினத்தின் தொனிப் பொருளும் உணர்த்துகின்றது. மழை இல்லா விடத்து நீர் வளம் குன்றிப் போகும் இதனால் ஒழுக்கம் குறைந்து உலகு அமைதி இழக்கும் உலகின் அமைதியின்மை ஓர் உலக யுத்தத்தினையே உருவாக்கும் ஏது நிலையும் உண்டு. "ஒரு துளி நீரையேனும் கடலினுள் வீணே கலக்க விடேன்" என்று குளம் அமைத் தான் மகா பராக்கிரமபாகு என வரலாறு கூறுகின்றது. ஆனால் தற்காலத்தில் உலகியல் மாற்றங்களினாலும், பூகோள வெப்பமடுதலாலும், மழை வீழ்ச்சி குறைந்து செல்கின்றது மேலும் மனித நடவடிக்கைகள் மழை வீழ்ச்சி குன்ற காரணமாக அமைந்து விடுகின்றன.

மழை வீழ்ச்சியின் அசம நிலை விவசாயத்தை பாதிக்கின்றது. பயிர் விளைச்சல் போதிய அளவு இன்றேல் பசி, பட்டினி, வறுமை தாண்டவம் ஆடி சமூக ஒழுக்கம் குன்றும். நாகரீக மோகம் கருதி மதில் அமைத்தல், வீட்டு முற்றத்தில் சீமந்து தளமிடுதல், போன்ற செயற்பாடுகளால் தரைக்கு நீர் சேமிப்பு குறைந்துவிடும். கிணறுகள் வற்றி நீர் வளம் குன்றும். எனவே பேச்சுக்களின்றி செயலில் வடிவம் கொடுப்போம். ஒவ் வொரு இல்லங்களிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்போம் , தண்ணீர்ப் பாசன முறைகளை விவசாயத்துக்கு பயன்படுத்துவோம், ஒரு சொட்டு நீரும் எம் சொத்தாகும்.

# ஒரு சிற்பியின் திருப்தி

கலாசாலையில் அமைந்துள்ள சரஸ்வதி திருவுருவச்சிலை மற்றும் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் உள்ள விநாயகர் திருவுருவச்சிலை என்பவற்றை தனது கலாசாலை ஆசிரிய மாணவப்பருவத்தில் உருவாக்கியவர் திரு. செகராசபிள்ளை செந்தில்வேல்.

2001 – 2002 காலப்பகுதியில் சித்திர ஆசிரியருக்கான பயிற்சி நெறியை நிறைவு செய்தவர். தற்போது வட்டு. மத்திய கல்லூரியில் ஆசிரியராக உள்ளார். தவணைக்கு ஒரு தடவையாவது கலாசாலைக்கு வருகை தந்து தான் உருவாக்கிய தெய்வீகத் திருவுருவச் சிலைகளைப் பார்த்து வணங்குவார்.





# News in Brief - Month of March

## 06.03.2024

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr.S.Laleesan, Principal, KTC.

The event was conducted by First year Maths teacher trainees. The event was moderated by Mr.S.Chandrakumar. Mrs M.Jeyakumary - Lecturer of KTC delivered speech on the topic of Women's Day.

Mrs Nalini Ahilathas - Primary ISA Jaffna zone participated as the guest speaker.

The Guest introductory speech was delivered by Ms S.Rajithaa, lecturer.

Finally Principal delivered a talk on Contribution of Kopay Teachers' College on Women's Education.

## 08.03.2024

Mahashivaratri, special pooja was held at Yogalingeswarar temple by Hindu Union.

## 11.03.2024

Motivational speaker from Tamil Nadu Professor Dr. Saranya Jeyakumar visited Kopay Teachers' College on 11.03.2023.

She delivered a motivational speech the topic on awareness of the Drug Abuse. In her speech she advised the teachers how to handle the students with new technics.

Mr Nadarasa Sachithanandam organizer in this event delivered the introductory speech And Professor Sivapillai, University of London also delivered blessing talk.

## 13.03.2024

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Senior Lecturer Mr T.Thavaseker. The event was conducted by First year Primary & R.C teacher trainees.

The event was moderated by Mrs Jeyanthakumar.Sulosanadevi.

Ms. Sudhakar Kamalini, teacher trainee Roman Catholic course delivered the student speech. Dr. Kamala Arunachalam, President of CANE Cancer Center, Dr. Shanthi Parameswaran, Psychiatrist, were the guests at the event.

## 20.03.2024

**International Water Day**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr.S. Lalee son, Principal of KTC started at 8.30 am.

The event was conducted by First year Science teacher trainees. The event was moderated by Veeraragavan Mayadevi. The teacher trainee's speech was delivered by Thavarasa Ritaa.

The Guest introductory speech was delivered by the lecturer Mr K.Balashanmugan

Guest Speaker Mr Nadaraja Aingaran Agriculture Ministry officer North Province delivered a speech.

An awareness documentary on water usage produced by Science course teacher trainees was screened.

## 26.03.2024

**International Theatre Day**

It was held on Wednesday at under the leadership of Mr.S. Laleesan, Principal of Kopay Teachers' College.

The event was conducted by First year teacher trainees.

Mr M. Rathakrishnan—Former Zonal Director of Education participated as a guest speaker.

Mrs Chandrika Tharmaratnam. Lecturer Drama subject also delivered a talk on International theatre day.

# கலாசாலையில் மகளிர் தினச் சிறப்பு நிகழ்வு
# அதிதிப் பேச்சாளராக திருமதி நளினி அகிலதாஸ் – ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணக் கல்வி வலயம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த மகளிர் தினச் சிறப்பு நிகழ்வுகள் 06.03.2024 புதன் காலை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவியும் யாழ்ப்பாணக்கல்வி வலய சேவைக்கால அரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகரு மாகிய திருமதி நளினி அகிலதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வுகளை கணித நெறி ஆசிரிய மாணவர் செல்வரட்ணம் சந்திரகுமார் நெறிப்படுத்தினார். ஆசிரிய மாணவர் உரையினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி தினேஸ் கௌசியாவும் விரிவுரையாளர் உரையினை முத்துக்குமாரு ஜெயக்குமாரியும் ஆற்றினர். பிரதம விருந்தி னருக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை மேற்கொண்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பெண்கல்விக்கு வழங்கிய பங்களிப்புப் பற்றி கலாசாலை அதிபர் ச.லலீசன் எடுத்துக்கூறி நிறைவுரையாற்றினார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி நளினி அகிலதாஸ் கலாசாலைச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் மதிப்பளிக்கப்பட்டார்.

திருமதி நளினி அகிலதாஸ் 07.03.2024 வியாழக்கிழமை அரசபணியில் இருந்து இளைப்பாறுகை பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.









## கலாசாலையில் சர்வதேச நீர் தினத்தை சிறப்பிக்கும் புதன் 22.03.2024 ஒன்றுகூடல் அதிதிப் பேச்சாளராக நடராஜா ஐங்கரன் ~ வடமாகாண விவசாய அமைச்சு உத்தியோகத்தர் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர்; கலாசாலையில்; இடம்பெற்று வரும் புதன் சிறப்பு ஒன்றுகூடல் இவ்வாரம் சர்வதேச நீர்தினம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதாக அமைந்தது. கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விஞ்ஞான நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி வீரராகவன் மாயாதேவி நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். ஆசிரிய மாணவர்; உரையை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி தவராசா ஜீற்றா ஆற்றினார். நீர்;த்தினம் பற்றிய சிறப்புரையை வடமாகாண விவசாய அமைச்சு உத்தியோகத்தர்; நடராஜா ஐங்கரன் வழங்கினார். அதிதிக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் மேற்கொண்டார். ஆசிரிய மாணவர்கள் தயாரித்த நீர்ப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஆவணப்படமும் காட்சிப்படுத்தப்பட்டது. சிறப்புரை யாற்றிய ந.ஐங்கரன் கலாசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டதோடு ஆவணப்படம் தயாரித்த ஆசிரிய மாணவர்கள் மேடையில் ஏற்றப்பட்ட நிலையில் - சபையோர் எழுந்து நின்று கரகோஷித்துப் பாராட்டுத் தெரிவித்துக் கௌரவித்தனர்.















# புதன் 13.03.2024 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளர்களாக கேன் புற்றுநோய் காப்பகத்தின் தலைவர் டாக்டர் கமலா அருணாசலம் மனநல வைத்திய நிபுணர் சாந்தி பரமேஸ்வரன் (லண்டன்) ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை புதன்கிழமை ஒன்றுகூடல் 13.03. 2023 புதன் காலை சிரேஷ்ட விரிவுரையாளர் த. தவசேகர் தலைமை யில் நடைபெற்றது. ஆரம்பக் கல்வி மற்றும் ரோமன் கத்தோலிக்க பாடநெறிகளைச் சேர்ந்த மாணவர்கள் நிகழ்வை முன்னெடுத்தனர். ஆரம்பக் கல்விநெறி ஆசிரியமாணவி திருமதி ஜெயந்த குமார் சுலோசனாதேவி நிகழ்வை தொகுத்து வழங்கினார். ரோமன் கத்தோலிக்க பாடநெயைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி சுதாகர் கமலினி மாணவர் உரையை வழங்கினார் நிகழ்வில் கேன் (CANE) புற்றுநோய் காப்பகத்தின் தலைவர் டாக்டர் கமலா அருணாசலம் , மனநல வைத்திய நிபுணர் டாக்டர் சாந்தி பரமேஸ்வரன் அதிதிகளாக கலந்து கொண்டனர். இவர்களுக்கான அறிமுக உரையை கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் வழங்கினார் பிள்ளை களிடையே காணப்படும் பதக்களிப்பை கையாளல் என்ற பொருளில் மனநல மருத்துவர் டாக்டர் சாந்தி பரமேஸ்வரன் கருத்துரை வழங்கினார். டாக்டர் கமலா அருணாசலம் வாழ்த்துரை வழங்கினார். அதிதி பேச்சாளர்கள் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப் பட்டனர். இவர்களுக்கான மாலைகளை விரிவுரையா ளர்களான க. அன்பரசி , பா. சர்மிளா ஆகியோர் அணிவித்தனர். டாக்டர் சாந்தி பரமேஸ்வரன் வசாவிளான் மற்றும் இருபாலையை சொந்த இடமாகக் கொண்டவர். கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையின் பழைய மாணவி ஆவார் டாக்டர் கமலா அருணாசலம் சாவகச்சேரி மற்றும் அல்லைப் பிட்டியைச் சேர்ந்தவர் . சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி. மயக்க மருந்து நிபுணராக லண்டனில் பணியாற்றியவர் தற்போது சுன்னாகம் கேன் புற்றுநோய் காப்பகத்தின் தலைவராக செயறப்படுகிறார்.











## யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின சிறப்பு வழிபாடு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்தி தின சிறப்பு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. இதனை கலாசாலை இந்து மன்றத்தினர் நாடாத்திச் சிறப்பித்தனர்.








## உலக கவிதை தினக் (21.03.2024) கவிநீர் கேளும்

கவிதையே உன்னை வீணாக்க
விரும்புவதில்லை
நீரைப் போலவே
மடை திறந்து பாயும்
மழை நீரைப் போலத்தான்
எனக்குள்ளும்
சிலவேளை கொட்டித் தீர்க்கும்
கவிதை மழை - அது
எப்ப வரும்
எங்கை வரும்
எப்பிடி வரும்
எதுவும் தெரியாது

உணர்வுகளின்
வாய்க்கால் வழி ஓடி
ஊருக்கு நன்மை செய்தால்
மகிழ்ச்சி......
மாறாக ஊரையே அழித்தால்
கவிதையும் நீரைப்போலத்தான்
அதனால் ஆக்கவும் முடியும்
அளிக்கவும் முடியும்
அளவோடு பயன்படுத்துவோம்
நீரைப்போல
கவிதையையுந்தான்
சில கவிதைகள்
மினறல் வோட்டர் போல
சில கவிதைகள் கிணற்று நீர் போல
வடிவம் முக்கியமா
உள்ளடக்கச் சுவையும்
தரமும் முக்கியமா
புரிந்து நடந்திடுவோம்

கவிதை ஆக்கம்
விரிவுரையாளர்
கவிஞர் வேல்நந்தகுமார்
(வேல்நந்தன்)

## கலாசாலையின் மகளிர் தின விழாவில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆற்றிய வரலாற்றுப் பெருமை கூறும் உரை

# பெண்கல்வியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நல்கிய காத்திரமாக பங்களிப்பு

தொகுப்பு : தர்ஷினி முத்துராஜா விரிவுரையாளர்

யாழ்ப்பாணக் கல்வி பாரம்பரியத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பங்களிப்பு அளப்பரியதாகும். 1923 ஆம் ஆண்டு சேர் பொன் இராமநாதனின் உறுதுணையால் இக்கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து 1945 ஆம் ஆண்டு இலங்கையில் இலவசக்கல்வி அறிமுகப் படுத்தப்பட்டது. இதனால் ஒரு கல்விப் புரட்சி நேர்ந்தது. கல்வி அனைவருக்கும் உரித்தானதாகியது. இதனால் பலரும் படிப்பதற்குப் புறப்பட்டனர். இச்சூழ்நிலையால் ஆசிரியர்களின் தேவை அதிகரித்தது. 1945 இனை அண்டிய காலப்பகுதியிலேயே இலங்கையில் அதிகளவு அரச ஆசிரியர் கலாசாலைகள் நிறுவப்பட்டன. 1947 ஆம் ஆண்டு பலாலி ஆசிரியர் கலாசாலை யூனியர் யுனிவேர்சிட்டி என்று சொல்லத்தக்க தரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டில் (1947) கோப்பாய் ஆசிரியர் கலாசாலை தனித்து பெண்களுக்கான ஆசிரியர் கலாசாலையாக தன் பணியைத் தொடர்ந்தது. 1977 வரை மகளிர் மட்டும் கற்கும் கலாசாலையாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை திகழ்ந்தது. இக்காலத்தில் பெண்கல்விக்கான சிறந்த பங்களிப்பை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வழங்கியது.

தெற்காசியாவிலேயே முதலாவது பெண்கள் பாடசாலை என்ற பெருமை உடுவில் மகளிர் கல்லூரிக்கு உண்டு. 1824 ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமாரின் அனுசரணையில் விடுதி வசதிகளுடன் கூடிய பாடசாலையாக இது உருவாக்கப்பட்டது. இது பெண் கல்விக்கு யாழ்ப்பாணம் கொடுத்த முக்கியத்துவத்திற்கான சான்றாதாரம் ஆகும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மகளிர் ஆசிரிய கலாசாலையின் உருவாக்கத்திற்குப் பின்னர் இந்து கிறிஸ்த இஸ்லாமிய சமூகத்தினரிடையே பெண் கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. யாழ்ப்பாண மக்களிடையே பெண்கல்வி கோவில் பாரம்பரியத்தின் ஊடாகவே கடத்தப்பட்டது. புராண படனம் கேட்கும் பெண்கள் பெண்கல்விக்கான அடித்தளத்தைப் பெற்றனர். வடமராட்சியைச் சேர்ந்த பார்வதி ஆச்சி புராண படனம் மேற்கொண்ட முதலாவது பெண்ணாக அறியப்படுகின்றார்.

இஸ்லாமிய சமூகத்தவர் தமது நம்பிக்கைகளின் அடிப்படையில் பெண்களை கற்பதற்கு அனுமதிக்காத ஒரு காலம் இருந்தது. ஆண் வாடை இல்லாத இடத்திலேயே பெண் கல்வி பெறுவதற்கு அவர்கள் அரைமனதுடன் சம்மதித்தனர்.

இஸ்லாமிய சமூகத்தவர் தமது நம்பிக்கைகளின் அடிப்படையில் பெண்களை கற்பதற்கு அனுமதிக்காத ஒரு காலம் இருந்தது. ஆண் வாடை இல்லாத இடத்திலேயே பெண் கல்வி பெறுவதற்கு அவர்கள் அரை மனதுடன் சம்மதித்தனர். இந்த வகையில் கிழகக்கிலங்கையின் நிந்தவூரைச் சேர்ந்த மைமூனா டீச்சர் என்பவர் இஸ்லாமிய பெண்களில் ஆரம்பகால கல்வி முன்னோடியாகக் கருதப்படுகின்றார். இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அனுமதி பெற்று ஆசிரியர் பயிற்சி பெற்றார். பெண்கள் தங்கிப் படிப்பதற்கு பாதுகாப்பான கலாசாலையாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விளங்கிய காரணத்தால் மைமூனாவை அவர்களது பெற்றோர் யாழ்ப்பாணம் கோப்பாயில் வந்து கல்வி கற்க அனுமதி வழங்கினர்.

இஸ்லாமிய பெண்களின் கல்வி வளர்ச்சியின் மைல் கல்லாக கொள்ளப்படுவது இஸ்லாமிய பெண்களுக்கான முதலாவது




பாடசாலையின் உருவாக்கம் ஆகும். நிந்தவூரில் அல்மஸ்கர் பெண்கள் பாடசாலை முதன்முதலாக அமைக்கப்பட்டது. இதன் அதிபர் பணியை அலங்கரித்தவர் வடமராட்சி தொண்டமானாற்றைச் சேர்ந்த மகிழம்மா டீச்சர் என்று அழைக்கப்பட்ட பெண்மணி ஆவார். இப்படி பல பெண்களின் அறிவு ஊற்றாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விளங்கியது என்றால் மிகை இல்லை.

பல புகழ் பூத்த ஆசிரியர்களை , அதிபர்களை உருவாக்கிய பெருமை இக்கலசாலையைச் சாரும். கலாசாலையின் பிரதான மண்டபம் ரதிலட்சுமி மண்டபம் என அழைக்கப்படுகின்றது. கலாசாலையில் உள்ள மண்டபங்கள் சங்கீத இராகங்களின் பெயர்களாலேயே அழைக்கப்பட்டன. அந்த வகையில் பிரதான மண்டபத்திற்குரிய பெயர் ஸ்பதகம் என்பதாகும். இந்த மண்டபத்தின் வாயிலில் அந்த பெயர் சூட்டிய பழைமைவாய்ந்த கல் இன்றும் காணப்படுகின்றது. ஆயினும் திருமதி ஆனந்தகுமாரசாமி இளைப்பாறிய போது அவர் பெண் கல்விக்கு வழங்கிய காத்திரமான பங்களிப்புகளுக்காக ரதிலட்சுமி மண்டபம் என இதனை பெயர் சூட்டி அழைத்தனர். திருமதி ரதிலஷ்மி



ஆனந்தக்குமாரசுவாதி அவர்களை கலாசாலையின் பொற்கால அதிபர் எனவும் கலாசாலையின் இரும்பு பெண்மணி எனவும் குறிப்பிடுவர். இதைவிட ஞானம் முருகேசு, செவாலியர் சிவலோகநாயகி என ஆளுமையுள்ள பெண் அதிபர்கள் கலாசாலையின் தலைமைப் பொறுப்பை. ஏற்று

➡ தொடர்ச்சி 12 பக்கம்

# உலக நாடக அரங்க தினம்

உலக நாடக அரங்க தினம் (World Theatre day) என்பது மார்ச் 27 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு வருடார்ந்த நிகழ்வாகும். சர்வதேச அரங்கப் பயிலகம் (International Theatre Institute) என்ற அமைப்பு யுனெஸ்கோவுடன் இணைந்து உலகெங்கிலும் உள்ள முன்னனி நாடக, நாட்டிய வல்லுனர்களால், நிகழ்கலைத் துறைகளில் ஈடுபடுவோரின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் முக்கிய நோக்கோடு 1948 ஆம் ஆண்டு பரிசில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அடுத்த கட்டச் செயற்பாடாக 1961 இல் ஹெல்சிங்கியில் நடந்த ITI இன் ஒன்பதாவது உலக சம்மேளனத்தின் போது பின்லாந்தின் தேசிய அரங்கியல் தலைவரும் ஸ்பனிஷ் மொழியின் முன்னனி நாடகாசிரியருமான கார்கிலோ ஆர்வி கிரிமா என்பவர் உலக அரங்க தினத்தினை ஏற்படுத்தி, அந்நாளில் உலகெங்குமுள்ள ITI மையங்களில் நாடகம் நாட்டியம் போன்ற அரங்கிவியல் நிகழ்வகளை நிகழ்த்திக் கொண்டாடும் யோசனையை முன்வைத்தார். அது 1962 இல் செயல் வடிவம் பெற்றது. இன்று ITI க்கு உலகம் முழுவதும் 85 மையங்கள் உள்ளது.

1962 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி பரிசில் தொடங்கிய 'Theatre of National' திருவிழாவை நினைவு கூறும் வகையில் அந்த தினத்தையே ஒவ்வொரு ஆண்டும் உலக அரங்க தினமாக கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது. இதையொட்டி உலகெங்கிலுமுள்ள ITI மையங்களில் நாடகம், நாட்டியம், இசைநாடகம் (opera), அந்தந்தப் பிரதேசத்தின் கிராமிய நிகழ்கலைகள் முதலியவை விமரிசையாகக் நிகழ்த்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்நாளின் முக்கிய நிகழ்வாக உலக மட்டத்தில் புகழ் பெற்ற ஒரு நாடகக் கலைஞர் ஒருவர் இந்நாளின் முக்கியத்துவம் குறித்த தனது பிரதிபலிப்புக்களையும், உலக கலாச்சார அமைதி பற்றியும் செய்தி ஒன்றையும் விடுப்பார். இவ்வாறான முதல் செய்தியை 1962 ஆம் ஆண்டில் பிரான்சிய எழுத்தாளரும், நாடகக் கலைஞருமான **சான் காக்டோ** விடுத்தார்.

இந்த உலக அரங்கத்தினத்தின் முக்கிய மானதும் கவனத்துக்குரியதுமான அம்சம், ஒவ்வொரு வருடமும் இந்த நாளில், சர்வதேச தரம் வாய்ந்த எழுத்தாளர் ஒருவரின் மூலம் உலக அரங்க தினச் செய்தி என்ற ஒன்று வெளியிடப்படுவதாகும்.முதலாம் ஆண்டுச் செய்தி (1962) நாடகம் மட்டும் அல்லாது கவிதை, ஓவியம், நாவல், சினிமா என்று பல்கலைகளிலும் முத்திரை பதித்த பிரெஞ்சு இலக்கிய கர்த்தாவான ஜீன் காக்டியு என்பவரால் வெளியிடப்பட்டது. இந்தச் செய்தி ஆசிரியர்களின் வரிசைகளில் ஆர்தர் மில்லர், பீட்டர் ப்ருக், பாப்லோ, நெருடா, ரிச்சர்ட் பர்டன், யூஜின் அயனெஸ்கோ, மார்டின் எஸ்லின், எட்வேர்ட் ஆல்பி, கிரிஷ் கர்னார்ட் போன்றோர் றிப்பிடத்தக்கவர்கள். ஜீன் காக்டியு "நடிப்பு மற்றும் கதை கூறுவதை நாடகமாக மக்கள் நினைத்துக் கொள்கிறார்கள்" என்ற முதல் செய்தியை வழங்கினார். அமெரிக்க கதாசிரியர் யூஜின் ஓ நீல் ஒருமுறை "வாழ்க்கையை நேர்மையாக பார்க்கும் வழிகளுள் ஒன்று அரங்கம்" என்று கூறினார். 2000 ஆம் ஆண்டிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையால் உலக நாடக தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.



**திருமதி சந்திரிகா தர்மரட்ணம்**
**விரிவுரையாளர்.**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

இந்நாட்களில் நாடகம், நடனம், கூத்து, இசை நாடகம், அண்ணாவியர் கௌரவிப்பு போன்ற பல கலை நிகழ்வுகள் நடைபெறும். பின்வந்த காலங்களில் இவ் விழாவில் சிறந்த நாடக ஆளுமைகளுக்கு தலைக்கோள் விருது வழங்கும் நிகழ்வினை பேராசிரியர் சி. மௌன குரு ஆரம்பித்து வைத்தார். 2024 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உலக நாடக விழா இரண்டு நாட்கள் நடைபெற்றது. இவ்வாண்டு நுண்கலைத்துறைத் தலைவர் துசியந்தி சத்தியஜித்தின் தலைமையில், உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கத்தால் தலைக்கோள் விருது பேராசிரியர் சி. மௌனகுருவுக்கு வழங்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைதுறையால் உலக நாடக விழாவை ஒட்டிய பல கலைநிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகிறது. கொரோனாக் காலமான 2021 ஆம் ஆண்டும் திரு வேலுசரவணன் zoom செயலியினூடாக வழியாக "தனது நாடக அனுபவங்கள்" பற்றி உரையாற்றினார். இவ்வருடம் யாழ் பல்கலைக்கழக மாணவர் மன்றத்தால் உலக நாடக தினம் நிகழ்த்தப்பட்டது. பல்கலை மட்டத்தில் மட்டுமன்றி இலங்கையில் பல நிறுவனங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உலக நாடக தினத்தில் எழுத்தாளர்கள், இயக்குனர்கள், நடிகர்கள், இசையமைப்பாளர்கள், ஆடைவடிவமைப்பாளர்கள், ஒளிஅமைப்பாளர்கள், மேடை அமைப்பாளர்கள் எனப் பலர் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்துதான் கடுமையாக உழைத்து நாடகங்களைச் சிறப்பாக்குவார்கள்.

நாடகக் கலையின் முக்கியத்துவத்தையும் சுற்றுச் சூழல் துறையில் அவை ஆற்றிய முக்கியப் பண்பிணையும், வாழ்வில் நாடகக் கலை ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியும் கொண்டாடும் வகையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2017 ஆம் ஆண்டு உலக நாடகதினம் அதிபர் திரு வீ கருணைலிங்கம் அவர்களது தலைமையில் மிச்சிறப்பாக முதல் முதலில் கொண்டாடப்பட்டது. விருந்தினரக செம்முகம் ஆற்றுகைக் குழுவின் நிறுவுனர் சத்தியசீலன் கலந்து சிறப்பித்தார். திருமதி. சந்திரிகா தர்மரட்ணத்தினால் மாவை நித்தியானந்தனின் 'கடைசி நாடகம்' என்ற நாடகத்தினை நெறியாழ்கை செய்தார். 2023 ஆம் ஆண்டு புதன்கிழமை ஒன்று கூடலின் போது அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் ஓய்வுநிலை தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் க.இ.கமலநாதன் "தனது நாடக அனுபவங்கள்" பற்றி உரையாற்றினார். அதே போல் இவ்வருடமும் (27.03.2024) புதன்கிழமை ஒன்று கூடலின் போது அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் ஓய்வுநிலை வலயக் கல்லிப்பணிப்பாளர் திரு. முத்து இராதாகிருஷ்ணன நாடகதினம் பற்றிய சிறப்புரையை ஆற்றினார்.

# “நீரின்றி அமையாது உலகு”



திருமதி கிற்றா தவராசா
ஆசிரிய மாணவி
விஞ்ஞானநெறி
(2023/2024)

“நீரின்றி அமையாது உலகு” என்பது திருவள்ளுவர் வாக்கு இதற்கமைய மக்கள் மட்டுமின்றி இப் பூமியிலுள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் நீர் அவசியம் ஆகும். இதனால் 1993 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 47வது கூட்டத்தொடரில் முதன்முதலாக நீர் தினம் பிரகனப் படுத்தப்பட்டது. இத்தினம் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 22ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது நீர் வளங்களை பாதுகாத் தலும் நீர்வளங்களை பேணுவது மே இதன் நோக்கமாகும். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு குறிக்கோளை மையமாகக் கொண்டுகொண்டாடப்படுகிது. இவ் வருடம் “அமைதிக்காக நீர்” என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்படு கின்றது.

மழை இல்லாது விடின் விவசாயத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது உணவின்றி உலகமே அழிந்து விடும். வள்ளுவன் பின்வரு மாறு “விசும்பிற்றுழி விழின் பசும் புற்றலை காண்பது அரிது” என வானத்தை சிறப்பித்து பாடுகின்றார். பூமியில் நீர் காணப்படுவதனால் தான் வெப்பம்தணிக்கப்படுகின்றது இதனால் தான் இங்கு உயிரினங்கள் வாழக் கூடியதாக உள்ளது இல்லாவிடில் ஏனைய கோள்கள் போன்று உயிரினங்கள் அற்ற கோளாகிவிடும் இவ்வுலகமே பசுமையாகவும் அழகாகவும் பூத்தலும் காய்த்தலும் நிகழ நீர் மூலதனமாக விளங்குகின்றது. எமது பூமிக்கு எவ்வாறு நீர் கிடைக்கின்றது, மழை பெய்வதனால்.

இம் மழை மூலம் கிடைக்கும் நீர் நீரோட்டங்கள் ஆக மாறி பின்னர் அருவிகளாகவும் நீர்வீழ்ச்சிகள் ஆகவும் ஓடுகின்றன , இது பின்பு வேகம் குறைந்து நதிகளாக பாய்கின்றன , நதிகள் வழியெங்கும் குளங்களையும் குட்டைகளையும் உருவாக்குகின்றன , இக்குளங்கள் , ஏரிகளில் நீரானது சேமிக்கப்படுகின்றது , இவ்வாறு சேமிக்கப்படும் நீர் ஊடுவடிதல் மூலம் தரைக்கு கீழ் சேமிக்கப்படுகின்றது.

வரட்சியான காலங்களில் மேற்பரப்பு நீர் கிடைக்காத போது எமக்கு தரைக் கீழான நீர் பயன்பாட்டுக்கு உதவுகின்றது. இதனை மனிதர்களாகிய நாம் பல்வேறு வழிகளில் மாசடையச்செய்கின்றோம். தொழிற்சாலைக் கழிவுகளை கலப்பதன் மூலம், நச்சுப் பொருட்களை வெளியேற்றுவதன் மூலம், செறிவான அமிலங்களை விசிறி விடுதல் மூலம், குப்பை களை இடுவதன் மூலமும் மாசுபடுத்தப்படுகின்றது. இதனை நாம் தடுக்க வேண்டும். நீரினை தற்போது வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றார்கள். இதனை தடுக்க வேண்டும் எனவே நீரினை சேமிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும். இதனை நன்கு பேணி நமது அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பது எமது கடமை ஆகும்.

## பெண்கல்வியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நல்கிய காத்திரமாக பங்களிப்பு

(9ஆம் பக்க தொடர்ச்சி)

பெண்கல்விக்குக் காத்திரமான பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். இவர்கள்தவிர குறமகள் எனப்படும் வள்ளிநாயகி இராமலிங்கம், சந்தனநங்கை கந்தப்பு போன்றவர்கள் எழுத்துத்துறையில் தமது ஆளுமைத்தடத்தைப் பதித்துள்ளனர். சாந்தினி சிவநேசன் நாட்டியத்துறைக்கு அரிய பங்களிப்பு நல்கிய விரிவுரையாளராகத் திகழ்ந்தார். 1977 ஆம் ஆண்டில் இசை நடனத் துறைகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உருவாக்கப்பட்டன. இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் முதல் அணியில் பயிற்சி பெற்ற இசை ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் இசை நடனத்துறைகளில் புகழ்க்கொடி நாட்டிய பெண் ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடாகவே உருவாக்கப்பட்டனர். இவ்வாறு பல பெண் ஆளுமைகளை உருவாக்கிப் பெண் கல்விக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிய நிறுவனமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விளங்குகின்றது.






## கலாசாலையில் நடைபெற்ற 27.03.2024 உலக நாடக விழாவின் சில பதிவுகள்









## கலைஞர் வேல் ஆனந்தன் கலாசாலைக்கு வருகை

கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் (1980 - 1986) நாடறிந்த ஆடற் கலைஞரும் ஆகிய கலைஞர் வேல் ஆனந்தன் 25.03.2024 கலாசாலைக்கு வருகை தந்தார். கலாசாலையில் தனது பணிக்காலத்தில் நிகழ்ந்த சுவாரசியமான நினைவுகளை மீட்டி மகிழ்ந்தார். தமிழிசை, தமிழ் ஆடல் பாடத்திட்டத்தில் உள்ளடக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் அதற்கு கலாசாலை ஆற்றக்கூடிய பங்களிப்புக் குறித்தும் தனது எண்ணப்பதிவுகளை வலியுறுத்தினார்.

